# திருமந்திரத்தில் குழந்தை பிறப்பு நுட்பங்கள்

9

இரா.கற்பகவள்ளி [1] & முனைவர்.மு.கவிதா[2]

1முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை

Mail ID - 20phtmf010@avinuty.ac.in ; ORC ID – 0000-0002-9674-9686

[2]உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,

கோயம்புத்தூர் 641043, தமிழ்நாடு, இந்தியா.

Mail ID - kavitha_tam@avinuty.ac.in ; ORC ID: 0000 – 0003 – 0484 – 9311.

**ஆய்வுச் சுருக்கம் :**

விஞ்ஞான முறையும்,விஞ்ஞான ஆராய்ச்சியும் தமிழர்களுக்கு புதியன அல்ல. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே சித்தர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்கள் அனைவரும் மனித சமுதாயத்திற்கு செய்திருக்கும் நன்மையானது அளவற்றது. அவர்கள் மக்கள் அனைவரும் நோய்நொடி இல்லாமல் வாழ்வதற்கான காரணங்களையும், இன்பத்துடன் வாழ்வதற்கான வழிமுறைகளையும், துன்பங்களிலிருந்து கரையேறுவதற்கான காரணங்களையும் பல கண்டறிந்துள்ளனர். உண்மைகள் அனைத்தையும் ஆராய்ந்து தெளிந்தனர். சித்தர்கள் கண்டறிந்த உண்மைகளை மனித சமுதாயம் அனுபவிக்கும்படி செய்தனர். சித்தர்கள் கண்டறிந்த விஞ்ஞான ஆராய்ச்சியையும், பலனையும் மனித சமுதாயமானது இன்றைய காலம் வரை அனுபவித்துக் கொண்டு வருகின்றது. சித்தர்களுள் திருமூலரின் திருமந்திரத்தில் அமைந்துள்ள குழந்தை பிறப்பு மருத்துவ நுட்பங்கள் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

**திறவுச்சொற்கள் : திருமந்திரம் – பிறப்பு நுட்பங்கள் – சுரோணிதம் – சுக்கிலம் – ஈனம் – பரகதி**

## முன்னுரை :

தமிழ் இலக்கியங்களில் சங்கம் மற்றும் சங்கம் மருவிய கால இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், சமய இலக்கியங்கள், சித்தர் இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள், பிற இலக்கியங்கள் என பல்கிப் பெருகியுள்ளன. பிற இலக்கியங்கள் அனைத்தும் சமுதாயத்தை பிரதிபலித்தாலும் கற்பனையுடன் மட்டுமே இயம்பி செல்கின்றன. சில தத்துவக்கூறுகளையும் தந்து செல்கின்றன .சித்தர் இலக்கியங்கள் மட்டுமே இருப்பையும் இயம்பி

தேவையையும் எடுத்துக்காட்டி, வாழும் முறைகளையும் கூறுவதுடன், வாழ்க்கைச் சிக்கல்களுக்கு சரியான தீர்வுகளையும் முன்வைக்கின்றன. சித்தர்களின் ஒவ்வொரு தத்துவமும் சிந்தனைப் போக்கும் குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்தில் கர்ப்பத்திலிருந்து பிறப்பினவாகும். குறிப்பிட்ட அந்தக் காலம் முடிவுக்கு வரக்கூடும். காலம் அடைந்து போனாலும் காலத்துக்குள் அடையாமல் அந்த தத்துவ போக்கும் சிந்தனையும் நீட்டிப்புக் கொண்டு இயங்குகின்றன. சித்தர்களின் . தத்துவ முறைகள் மக்களுக்கு பெரிதும் உதவுகின்றன மருத்துவ நுட்பங்கள் பதினெண் சித்தர்களுள் திருமூலர் அதிகமான மருத்துவ குறிப்புகளைக் கூறியுள்ளார்.

**திருமந்திரம் அறிமுகம் :**

திருமந்திரமானது சைவத்திருமுறைகளுள் பத்தாவது திருமுறையாகும். இதனை அருளியவர் திருமூலர். தமிழ் செய்தல் என்பது ஆகமத்தை செய்தல் என பொருள்படும். இவர் கூறுவதாக,

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"**

**(திரு. பா. எண் – 81)**

எனும் பாடல் அமைகின்றது. திருமூலர் திருவாடுதுறையில் இருந்த ஓர் அரச மரத்தின் கீழ் அமர்ந்து மூவாயிரம் ஆண்டுகள் தவம் செய்ததாகவும் , ஒரு ஆண்டிற்கு ஒரு பாடலை இயற்றினார் என்பது செவிவழி செய்தியாகும். இப்பாட்டுத்தொகை 3000 என்பர். இதனை,

**"மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்**
**மூலம் உரை செய்த முன்னூறு மந்திரம்**
**மூலம் உரை செய்த முப்பது உபதேசம்**
**மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே"**

**(திரு. பா. எண் – 99)**

என்ற பாடல் விவரிக்கின்றது.

**குழந்தை பிறப்புமுறை :**

உலகம் ஐம்பூத இணைப்பினையுடையது. அதுபோல உடம்பினுள் மண், நீர், தீ, ஆகாயம், என்னும் ஐம்பூத இணைப்பினால் ஆனது. இந்த ஐந்தும் உடம்பில் இருப்பதனைக் காணலாம். இறைவன் உடலை இவ்வாறு படைத்து அருள் செய்வதனை,

**"எட்டு திசையும் அடிக்கின்ற காற்றவன்**
**வட்டத் திரையனல் மாநிலம் ஆகாசம்**
**ஒட்டி உயிர்நிலை என்றும் இக் காயப்பை**
**கட்டி அவிழ்க்கின்ற கண்ணுதல் காணுமே"** (திரு.பா.எ.121)

என்ற பாடல் புலப்படுத்துகின்றது.

**கரு அறிதல் :**

ஒரு ஆண் மகனிடம் தோன்றும் சுக்கில மிகுதியினால் ஒரு பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறக்கும். பெண்களிடம் தோன்றும் சுரோணிதம் மிகுதியாகும் போது பெண் குழந்தை பிறக்கும். இவ்விரண்டாகிய சுக்கிலமம் சரோணிதமும் சமமாக இருப்பின் அலியாக குழந்தை பிறக்கும். இதனை,

"ஆண்மிகில் ஆண் ஆகும் பெண்மிகில் பெண் ஆகும்
பூண் இரண் டொத்து பொருந்தில் அலி ஆகும்"

(திரு.பா.எ.123 1-2)

என்று கூறுகின்றார். .மேலும் ஆண்மகனின் முயற்சி மிகுதியாக புணர்ச்சியில் காணப்பட்டால் உலகம் முழுதும் அரசு செய்யும் ஆண்மகன் பிறந்து ஆண்மையுடையவன் ஆவான் ஆனால் சுக்கிலும் மிக்க சுரோனித மாயின் சுக்கிலம் கருவில் பாய்வது இல்லை. ஆகவே கரு உற்பத்தி இல்லாமல் பயனின்றி போகும் என்பதனை,

**"தான் மிகும் ஆகில் தரணி முழுதாளும்
ஆண் வசம் மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே"**

(திரு.பா.எ.123-3-4)

. என்ற அடிகளின் மூலம் அறிய முடிகின்றது

**கருவில் உள்ள குழந்தை வளர்ப்பு :**

குயிலின் முட்டையைக் காக்கையின் கூட்டில் வைத்தால் காக்கையானது சிறிதும் சந்தேகம் கொள்ளாமல் அம்முட்டையினை அடைகாத்து தன் குஞ்சினைப் போலவே வளர்க்கும். அது போல் தாயும் போக மயக்கத்தால் இயங்காமலும், போக்கு இல்லாமல் ஏன் என்று கேட்காமலும், கருவில் உள்ள குழந்தையின் சரீரத்தை காக்கின்றாள். என்பதனை,

**"குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிலிட்டால்
அயிர்பின்றி காக்கை வளர்க்கின் றது போல்
இயக்கில்லை போக்கில்லை ஏன் என்பதில்லை
மயக்கத்தால் காக்கை வளர்கின்ற வாறே"**

(திரு.பா.எ.134 4-2)

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

**விந்துவினால் விளையும் பிறப்புக்கள் :**

காதலர்கள் இருவர் கூடும்போது தோன்றும் விந்தானது நடு நாடி வழியே நாத சக்தியை எதிர்த்துச் சென்றால் அதன் வாயிலாய் பிறக்கும் குழந்தை சிவ வடிவமாய் பிறக்கும். விந்தானது நிதானமாக, நாதசக்திக்கு மேற்பட்டு எதிர்த்துச் சென்றால் திருமால் வடிவில் பிள்ளை பிறக்கும். இரண்டும் சமமாக செல்வின். பிரம்ம வடிவினன் ஆவான். இருவரும் ஒத்துழைந்த காமத்தால் பிறந்த மகன் அரசன் ஆவான். இதனை,

**"ஏற எதிர்க்கில் இறைஅவன் தான்ஆகும்**
**மாற எதிர்க்கில் அரிஅவன் தான்ஆகும்**
**நேர்ஒக்க வைக்கின் நிகர்போதத் தான்ஆகும்**
**பேர் ஒத்த மைந்தனும் பேரர சாளுமே"**

**(திரு.பா.எ.**125 1-4)

என்ற பாடலின் மூலம் அறியமுடிகின்றது.

**குழந்தை அங்கம் ஈனமாக பிறத்தல் :**

கருப்பையில் பாயும் வாயு நான்கு மாத்திரை அளவு குறைந்தால் குழந்தை குள்ளமாக பிறக்கும். வாயு இளைக்குமானால் கைக்குறை அல்லது கால் குறையுடன் பிறக்கும். வாயு சிறிது தடைபடின் கூணாக பிறக்கும். இங்கு கூறிய வாயு ஆண் மகனுடையது அன்றி பெண்ணுடையது அன்று இதனை,

**"பாய்கின்ற வாயு குறையில் குரல் ஆகும்**
**பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்**
**பாய்கின்ற வாயு நடுபடின் கூன் ஆகும்**
**பாய்கின்ற வாயுமா தற்கில்லை பார்க்கிறேலே"**

**(திரு.பா.எ.**127)

என்ற பாடல் அடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

**குழந்தை ஊமை குருடு ஆதல் :**

தாயின் வயிற்றில் மலம் மிகுமானால் கருவிடை வந்த குழந்தை மந்தமாக இருக்கும். நீர் மிகுந்திருக்குமானால் ஊமையாகப் பிறக்கும். மலமும் சலமும் மிகுந்திருந்தால் கண் இன்றி பிறக்கும். என்பதனை திருமூலர்,

**"மாதா உதரம் மலம்மிகு மந்த நாம்**
**மாதா உதரம் சலம் மிக்கின் மூங்கையாம்**
**மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை,**
**மாதா உதிரத்தில் வந்த குழவிக்கு"**

**(திரு.பா.எ.**128)

என்று கூறியுள்ளார்.

**குழந்தை பிறவாமைக்கு காரணம் :**

தாய் தந்தையர் இருவருக்கும் பிராணவாயு சரிசமமாக ஒத்து நடமாடின் கருவில் கொண்ட குழந்தை அழகாக இருக்கும். ஆனால் இருவர் தம் பிராணவாயுவும் புணர்ச்சியால் தடுமாற்றத்தை அடைந்தாள் குழந்தை கருவில் தரித்தல் ஆகிய பயனில்லாமலே போகும் என்பதனை,

**"கொண்ட நல்வாயு இருவருக்கும் ஒத்தொழில்**
**கொண்ட குழவியும் கோமளம் ஆயிடும்**
**கொண்ட நல்வாயு இருவருக்கும் குழறிடில்**
**கொண்டதும் இல்லையாம் கோள்வளை யார்க்கே"**

**(திரு.பா.எ.**130)

இந்தப் பாடல் அடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

**பத்து மாதங்களில் குழந்தை பிறத்தல் :**

ஒளிப் பொருந்திய பத்து மாதங்களில் தாய் வயிற்றில் குழந்தையின் வடிவம் வளரும். இந்தப் பத்து மாத காலம் கழிந்ததும் பூமியில் குழந்தை பிறக்கும். பிறகு தாயால் வளர்க்க பெறும். வளரும் போது மாயையின் சார்பால் தன்னொரு தனக்கும் புலனாகாமல் இருப்பதனை அறிவார் யார்? யாருமில்லை என்பதனை,

"உருவம் வளர்ந்திடும் ஒன் திங்கள் பத்தில்
பருவம் தாகவே பாரினில் வந்திடும்
மருவி வளர்ந்திடும் மாயையி னாலே
அருவம தாவதிங் கார்அறி வாரே"

**(திரு.பா.எ.**131)

திருமூலர் இப்பாடலின் வழி உரைக்கின்றார்.

**பிறந்த உயிர் பரகதி அடைதலும் கூடும் :**

காதலன் காதலி ஆகிய இருவரும் இணைந்து இன்பமுருகி நாடிய பின் கரு உருவாகும். பின்பு துன்புறும் பாசமாகிய பந்தத்தில் கட்டுண்டு தோன்றி வளரும். பிறகு மேலாக இருக்க விரும்பி நிலத்தில் பிறந்த அவ்வுயிர்கள் பழம் பிறவியின் வினையால் துன்பமுறும். பின் ஐந்து எழுத்து மந்திரமான நமசிவாய என்னும் எழுத்தை ஓதி ஆக்கத்தை அடைதலும் கூடும். என்பதனை,

**"இன்புற நாடி இருவரும் சந்தித்துத்**
**துன்புற பாசத்தின் தோன்ற வளர்ந்தபின்**
**முன்புற நாடி நிலத்தின் முன் தோன்றிய**
**தொன்புற நாடி நின் காதலும் ஆமே"**

(திரு.பா.எ.133)

இவ்வடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

**முடிவுரை :**

பொருள் இல்லாதவர்கள் இவ்வுலகத்தில் எந்த இன்பத்தையும் பெற முடியாது. அதுபோல் அருள் இல்லாதவர்கள் அவ்வுலகத்தில் எந்த இன்பத்தையும் பெற முடியாது. பொருள் இல்லாதவர்களுக்கு கூட இன்றில்லா விடினும் என்றாவது ஒரு நாள் பொருள் கிட்டும். ஆனால் அருள் இல்லாதவர்களுக்கு பின்னாளில் என்றைக்குமே எந்த வித நற்பயனும் கிட்டாது. அவர்கள் விளங்க போவதும் இல்லை என்று கூறுகிறது வள்ளுவம். ஜீவகாருண்யம் என்றழைக்கப்படும் இறை அருள் இருந்தால் மட்டுமே மகப்பேறு என்னும் அற்புதமான செயல் கிடைக்கிறது. இதனை முற்காலத்துலேயே திருமூலர், குழந்தை பிறப்பின் ரகசியத்தையும், குழந்தை பிறப்பு முறையையும், குழந்தை வளர்ப்பு முறையையும் பற்றி சரியாக கணித்து கூறியுள்ளார். திருமந்திரமும் இதனை மிகவும் ஆழமாக எடுத்துரைக்கின்றது. இக்கட்டுரையின் மூலம் திருமூலரின் திருமந்திரங்கள் வாயிலாக குழந்தை பிறப்பு நுட்பங்கள் குறித்து அறிய முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்:**

1. த. சரவணன் , திருமூலர் அருளிய திருமந்திரம் , முதலாம் தந்திரம் , முதற்பதிப்பு – 2020, ஸ்ரீ செண்பகா பதிப்பகம் , 32 – ப . கிருஷ்ணா தெரு. பாண்டி பஜார் , சென்னை- 600017
2. அழகர் நம்பி , திருமூலரின் திருமந்திரம் மூலமும் உரையும் , 1,2,3, தந்திரங்கள், கவிதா பதிப்பகம் , சென்னை – 600005
3. அ. ச. ஞான சம்பந்தம் , திருமந்திரம் (பத்தாம் திருமுறை), கங்கை புத்தக நிலையம், பதிப்பு 2017, சென்னை- 600004
4. டாக்டர் . துரை . ராஜாராம் , திருமூலர் வாழ்வும் வாக்கும், முக்கிய மந்திரங்களுக்கு பொழிப்புரையுடன், நர்மதா பதிப்பகம் , முதல் பதிப்பு 2013, சென்னை
5. சி. எஸ். தேவநாதன், தினமொரு திருமந்திரம், விஜயா பதிப்பகம், முதல் பதிப்பு – 2012
6. வேனு சீனிவாசன். வெற்றிக்கு வழிக்காட்டும் திருமந்திரம், அழகு பதிப்பகம், முதல் பதிப்பு – 2012, சென்னை.